# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்
## சங்ககாலம் முதல் சமகாலம் வரை

வி.எல்.பி.ஜானகியம்மாள் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை
மற்றும்
யாழ்ப்பாணம் கிழைத்தேய கல்விக் கல்லூரி, இலங்கை
இணைந்து நடத்தும்

## பன்னாட்டு ஆய்வரங்கம்

# Ethics In Tamil Literature
## Sangam To Contemporary Age


பதிப்பாசிரியர்கள்
முனைவர் கோ. சுரேஷ்
பேராசிரியர். கலாநிதி என். சண்முகலிங்கன்



தமிழ்த்துறை
வி.எல்.பி.ஜானகியம்மாள் கலை அறிவியல் கல்லூரி
தன்னாட்சி
NAAC 'A' தகுதி மற்றும் ISO 9001:2008 தரச் சான்றிதழ் பெற்ற கல்லூரி
கோவைப்புதூர், கோவை
தமிழ்நாடு, இந்தியா - 641042
தொலைபேசி எண்: 0422 - 2605162 | இணையம்: www.vlbjcas.ac.in

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்
## சங்ககாலம் முதல் சமகாலம் வரை
## (பன்னாட்டு கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் கோ. சுரேஷ் |
| | | பேராசிரியர். கலாநிதி என். சண்முகலிங்கன். |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| முதற்பதிப்பு | : | அக்டோபர் 2017 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை |
| | | வி.எல்.பி. ஜானகியம்மாள் |
| | | கலை அறிவியல் கல்லூரி |
| | | கோவைபுதூர், கோவை-42 |
| வடிவமைப்பு | : | டேனி @ஸ்டுடியோஅனிமா |
| அச்சாக்கம் | : | ஜிக்ஜாக் பிரிண்டர்ஸ், கோவை. |
| பக்கங்கள் | : | XX+649 = 669 |
| விலை | : | ரூ. 500/- |

ISBN: 978-93-5281-553-1


## Ethics In Tamil Literature
## Sangam To Contemporary Age


| | | |
|---|---|---|
| Editors | : | Dr. G. Suresh, |
| | | Prof. N. Shanmugalingan |
| Copyright | : | Editors |
| First Edition | : | October 2017 |
| Published | : | Department of Tamil |
| | | VLB Janakiammal |
| | | College of Arts and Science |
| | | Coimbatore - 641042 |
| Digitography | : | Dani @studioanima |
| Printed | : | Zig Zag Printers, Coimbatore. |
| Pages | : | XX + 649 = 669 |
| Prize | : | Rs. 500/- |

# ஈழத்து நவீன இலக்கிய விமர்சனமும் கலாரசனையும்

திரு. தி. செல்வமனோகரன்
வருகைதரு விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை - இந்துமெய்யியல்
யாழ் பல்கலைக்கழகம்.

எல்லா மனிதர்களின் வாழ்வியலோடும் ஒட்டியவையாக விமர்சனமும் ரசனையும் அமைந்துள்ளன. பாகுபாடற்ற மனித அறிவிற்கான இயங்கு தளமாகக் கூட இவற்றைச் சொல்லலாம். ரசித்தல் - தர்க்கித்தல் - விமர்சித்தல் ரசித்தல் என்ற சுழலும் இராட்டினமாக இது அமைந்துள்ளது. கலை இலக்கியம் மீதான ரசனையும் விமர்சனமும் இதன் வழி அமைபவையே.

தமிழ் உரை மரபின் வழி விமர்சனம் சார்ந்த சிந்தனை இருந்து வந்துள்ளதாக விமர்சனம் பற்றிய ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். (தாயகம் 1993-ப) ஆயினும் காலனித்துவ ஆட்சியின் விளைவாகவே ஆங்கிலக் கல்வி, உரைநடை எழுச்சி, இலக்கண சீர்திருத்தங்கள், நவீன கலை இலக்கிய வடிவங்கள் போன்றன தோற்றம் பெற்றன. நவீன சிந்தனையின் வழி, கோட்பாட்டியல் ரீதியாக வளர்ச்சி பெற்ற உரைநடை வடிவமாக விமர்சனத்தைக் கூறலாம். மேலைத்தேய சிந்தனையும் தமிழர்சிந்தனையும் இணைந்த வழி சுதந்திரத்தின் பின்னான காலப்பகுதியிலே விமர்சனம் - நவீன இலக்கிய விமர்சனம் செழிப்படையத் தொடங்கியது.

ஆங்கிலத்தில் "*Criticism*" என வழங்கிய சொல்லே தமிழில் விமர்சனம், திறனாய்வு எனக் கூறப்படுகிறது. ஆயினும் விமர்சனம் வேறு திறனாய்வு வேறு என்பாரும் உள்ளனர். அதை நாம் இங்கு கருத்திற் கொள்ளவில்லை. விமர்சை - விமர்சனம் இதன் பொருள் விளங்கச் சொல்லுதல், விரிவுரை உரைத்தல், பாராட்டிப் பேசுதல் என்பதாகும். வட மொழியில்

**"ஒரு படைப்பின் உண்மை யியல்பை இனங்கண்டு அதனைச் சுவைஞர் களுக்காக வியாக்கியானம் செய்து சரிவர அறிமுகம் செய்வது விமர்சனத்தின் முக்கிய பணியாகின்றது"**

"வி" எனும் உபசர்க்கத்தோடு "ஸ்மிரு" எனும் வினையடி இணையும் போது "விஸ்மிரு" எனவருகிறது. இதுவே தமிழில் விமர்சனம் ஆகிறது. விஸ்மிரு எனும் சொல்லுக்கு ஆச்சரியம், தெளிவுபடுத்தல், விளங்க உரைத்தல் எனப் பொருள் சுட்டப்படுகின்றன. இன்னும் சுட்டியுரைக்கின் ஒருவரின் ஆச்சரியம் இன்னொருவருக்கு ஆச்சரியம் தராததாக இருக்கும். ஆக அவ்விடயம் பற்றிய ஒருவரின் முன்னறிவே அவ்வாச்சரியத்தை, தெளிவை - தெளிவுற உரைத்தலைத் தரும். ஆக கலை இலக்கியம் பற்றிய விமர்சனத்திற்கு அது பற்றிய பல்தரப்பட்ட அறிவு அவசியமாகிறது என்பர். ஊசவை்உளை அ என்ற சொல்லுக்கு இணையாக 1944இல் விமர்சனம் எனும் சொல்லை தமிழில் வழங்கியவராக ஆ.முத்துசிவன் அடையாளப்படுத்தப்படுகிறார். (தி.சு.நடராசன் 2003. ப.5) விமர்சனம் பற்றிய தமிழின் ஆரம்ப நூல்களாக தொ.மு.சி.ரகுநாதனின் இலக்கிய விமர்சனம் (1948), சு.நா.சுப்பிரமணியத்தின் விமர்சனக்கலை (1951) என்பவற்றைக் கூறலாம். பின்பு க.கைலாசபதி, கா.சிவத்தம்பி,தி.சு.நடராசன்,தி.க.சிவசங்கரன், மு.த., மு.பொ., சோ.கி., ஏ.ஜே. போன்ற பலரின் நூல்கள் வெளிவந்துள்ளன. மேலும் பலர் இது பற்றிக் கட்டுரைகளும் எழுதியுள்ளனர்.

கலை இலக்கிய வளர்ச்சியை முன்னகர்த்திச் செல்லவும் படைப்பாளியை ஆற்றுப்படுத்தவும் கலைஞனின் சுவையின் தரத்தை விருத்தி செய்யவும் விமர்சனத்தின் பங்கு முக்கியமானதாகும். அவ்வாறெனின் விமர்சனமாவது யாது? எனும் வினா எழுகிறது.

**கலையிலக்கியங்களைப் பட்டியற்படுத்துவதா - அதுவல்ல**
**கலையிலக்கியப் படைப்புக்களை மதிப்படுவதா - அதுவல்ல**
**கலையிலக்கியங்களில் உள்ளமைந்திருப்பதை வெளிப்படுத்துவதா -அதுவல்ல**
**விமர்சனம் கலை சார்ந்த முயற்சியா - அதுவல்ல**
**விமர்சனம் விஞ்ஞானம் சார்ந்த முயற்சியா - அதுவல்ல**
**கலை இலக்கிய ஆய்வு முயற்சியா - அதுவல்ல**
**சமூகவிஞ்ஞானங்களின் தொடர்பின்றி தனிமைப்படுத்தி ஆராய்ந்தவையா - அதுவல்ல**

இவையாவற்றினின்றும் மேற்கிளம்புகின்ற இவை யாவற்றையும் உள்ளடக்கிய ஒன்றாகவே விமர்சனத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கால தேசவர்த்தமானத்திற்கேற்ப கலை இலக்கியம் எவ்வாறு தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறதோ. அதே போல விமர்சனமும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. ரசனையும் அவ்வாறுதான்.

நவீன கலை இலக்கியத்தை மானிடவியல் வரலாறு, சமூக மனித ஒழுக்கவியற் சிந்தனைகள், பண்பாடு, மதிப்பீடு, ஆய்வு எனும் பலதளக்கூறுகளின் இணைவாகச் சுட்டலாம். (சோ.இ.1992 - பக்., 9- 20) விமர்சனமானது

விபரிப்பு, விளக்கம், பகுப்பாய்வு, தொகுப்பாய்வு, மதிப்பீடு எனும் ஐந்து அம்சங்களை உள்ளடக்கியதாய் இருக்க வேண்டும். அதுவே முழுமையான விமர்சனமாக அமையும். (இ.முருகையன் - தாயகம். 1988.இ.18.ப.,21) கலையிலக்கிய விமர்சனங்களின் ஏற்புடைமையைத் தீர்மானிக்க குறித்த கலைஞனுடைய படைப்பாற்றல், வாழ்க்கை, அனுபவம,; படைப்பின் சாத்தியப்பாடு பற்றிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன. விமர்சனத்தை ஒரு கலையாக கருதுவோரும் ஓர் அறிகை முயற்சியாகக் கருதுவோரும் உள்ளனர். விமர்சனம் ஓர் அறிக்கை வாயிலாக அமையினும் சிறந்த விமர்சனம் ஒன்று சில வேளைகளில் ஒரு கலைப்படைப்பிலும் பார்க்கச் சிறந்ததாக அமைந்துவிடுவதும் உண்டு.

இவ்விமர்சனமும் இரசனையும் பிரிப்பற்றவை. இரசனை என்பது அலங்காரம், அணிவகுப்பு, இரசிப்பு, சாறு, சுவை, நா, மாலை கோத்தல், வாசகவிணைப்பு எனப் பலவாறு பொருள் சுட்டப்படுகிறது. (நா.கதிரவேற்பிள்ளை அகராதி. 2008.ப.,225) கலைஞனுக்கு இரசனை உணர்ச்சி இன்றியமையாததாகும். கலையாக்கச் செயற்பாட்டின் இன்றியமையாத உறுப்புக்கள் இரசனையும் விமர்சனமுமே. ஒவ்வொரு படைப்பும் கலைஞனின் இரசனை சார்ந்தது. விமர்சனத்தின் பணி அக்கலா இரசனையை ஊக்கிவிப்பது; பண்படுத்துவது; வெளிப்படுத்துவது. விமர்சனம் கலாரசனையில் இருந்து எழுவது; அதன்வழி விமர்சனம் கலாரசனையை கலைஞனிடத்தும் சுவைஞனிடத்தும் ஊட்டுகின்றது, ஊக்குவிக்கின்றது, கலையிலக்கியத் தரத்தை விருத்தியுறச் செய்கிறது. இலக்கியப்பயில்வில் இன்றியமையா உயிர் மையம் விமர்சனம் ஆகும். அதனை இரசனை என்றும் கண்டனம் என்றும் பிரித்துப்பார்த்தல் இயலாது. ஒரு படைப்பின் உண்மையியல்பை இனங்கண்டு அதனைச் சுவைஞர்களுக்காக வியாக்கியானம் செய்து சரிவர அறிமுகம் செய்வதாக அமைவது விமர்சனத்தின் முக்கிய பணியாகின்றது. இதன் வழி விமர்சனக் கொள்கைகள்,

- ◊ **அநுகரணக் கொள்கை**
- ◊ **பயன் வழிக் கொள்கை**
- ◊ **வெளிப்பாட்டுக் கொள்கை**
- ◊ **புறநிலைக் கொள்கை**

***(க.கைலாசபதி)***

என நான்காக எடுத்தாளப்படுகின்றது.

இந்த வகையில் ஈழத்து நவீன கலையிலக்கிய விமர்சனமும் அதன் செல்நெறி - கலாரசனை சார்ந்த அதன் பணிகள் என்பன இங்கு நோக்கப்படுகின்றன. ஈழத்து இலக்கிய விமர்சனம் ஐம்பதுகளின் பிற்பகுதியிலேயே வளர்ச்சியடையத் தொடங்கியது. அந்த வகையில் ஐம்பதுகளின் பின்னான காலப்பகுதியை ஆய்வின் வசதி கருதி அதன்

பின்னாக காலப்பகுதியை அவ்வவ்காலத்தின் முதன்மை பெற்ற கருத்தியலின் அடிப்படையில் பிரித்துரைக்கலாம்.

- ◊ **முற்போக்கு இலக்கிய காலம்**
- ◊ **போரியற்காலம்**
- ◊ **தற்காலம்**

ஈழத்து நவீன இலக்கியம் அறிஞர் சித்திலெப்பை, சரவணமுத்துப்பிள்ளை, துரையப்பாப்பிள்ளை போன்றோரின் வருகை தொட்டு மறுமலர்ச்சி கால எழுத்துக்களினூடாக வளரத்தொடங்கியது. ஆரம்பத்தில் இரசிகமணி கனகசெந்திநாதனின் எழுத்துக்களே நவீன இலக்கிய விமர்சன கலாரசனையுடைய எழுத்துக்களில் முக்கியமானதாக அமைந்தது. அவரின் எழுத்துக்கள் பாரம்பரியமும் நவீனமும் நிறைந்த செல்நெறிக்குரியவை. இரசிகமணி விமர்சன மனோபாவமுடையவர் என்பதற்கு அவருடைய ஈழத்து இலக்கிய வளர்ச்சி சிறந்த எடுத்துக்காட்டு.

ஆயினும் விமர்சனம் ஐம்பதுகளின் பிற்பகுதி தொட்டே அது சடுதியான மாற்றங்கள், வளர்ச்சிப்போக்கு என்பவற்றைப் பெறத்தலைப்பட்டது. ஆங்கில நவீன இலக்கிய பரிச்சயம், அரசஉத்தியோகம், மத்தியதரவர்க்கம், தமிழகத்து அரசியல், கருத்தியல்,கலை இலக்கிய செல்நெறிகளின் தாக்கம் என்பன ஈழத்து தமிழ் இலக்கியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழ் இலக்கிய பரப்பில் மார்க்சியவாதம் - அதன் ரஷ்ய,சீன கருத்தியற்றளங்கள், அமைப்பியல்வாதம், யதார்த்தியவாதம், பெண்ணியவாதம் எனப்பல கோட்பாடுகள் அறிமுகமாயின. அவை படைப்புக்களிலும் செல்வாக்குச் செலுத்தின. தமிழகத்தில் திராவிட வாதம் - தனித்தமிழ் வாதம், ஹிந்தி எதிர்ப்பு போன்ற கருத்தியல்கள் வளர்ந்தன. இவற்றிற்கு சமாந்தரமாக நவீன இலக்கிய விமர்சனமும் வளரத்தொடங்கியது. நா.வானமாமலை இதில் முக்கியமானவர்; மார்க்சியவாதியும் கூட. இவருக்குச் சமாந்தரமாக மார்க்சியத் தளத்தில் விமர்சனத்தை முன்வைத்த ஈழத்தவர்களாக க.கைலாசபதியும், கா.சிவத்தம்பியும் விளங்குகின்றனர். வானமாமலையையும் தாண்டி தமிழுலகில் விமர்சனத் தளத்தில் ஆழத்தடம் பதித்தவர்களாக இவர்கள் இருவரும் மதிப்பீடு செய்யப்படுகின்றனர்.

பேராசிரியர் வீ.அரசு, இவர்கள் இருவரும் சர்வதேச அளவிற்கு தமிழ் இலக்கியத்தை இட்டுச் சென்றவர்கள் - அடையாளம் கொடுத்தவர்கள் என மதிப்பீடு செய்துள்ளார். இவர்கள் இருவரும் ஈழத்து நவீன இலக்கிய விமர்சன உலகின் இரட்டையர்களாகவும் ஜாம்பவான்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். தமிழில் விமர்சனத்தை சிறந்த முறையில், முறையியல் சார்ந்ததாக அறிமுகம் செய்தனர் என முன்மொழியப்படுகின்றனர். மேற்கூறிய இம்மதிப்பீடுகள் யாவும் உண்மையானவையே. அதில் எமக்கு மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் நவீன இலக்கிய விமர்சனமும்

கலாரசனையும் என வருகின்றபோதே எமக்குச் சிக்கல் தோன்றுகின்றது. கைலாசபதி இலக்கியக் கொள்கையில் வலியுறுத்தியதும் எடுத்தாண்டதுமாக இருப்பது சமுதாயக் கொள்கையே. (முருகையன்.இ, தாயகம், ப.22) அவயவியக் கொள்கை,அறிவியற் கொள்கை, உணர்ச்சிக் கொள்கை, அழகியற்கொள்கை (கைலாசபதி 1972-ப) என்பவற்றிற்கு அவர் அதிகம் முதன்மை கொடுக்கவில்லை. சிவத்தம்பியும் இதற்கு விதிவிலக்கல்ல. தாம் வரித்துக் கொண்ட மார்க்ஸிய தடத்தின்னின்றும் சமுதாயக் கொள்ளைக்கு முதன்மையளித்ததைப் போல விமர்சன முறையியலிலும் பயன்வழிக் கொள்கைக்கே அதிக முதன்மை கொடுத்தனர். இதனாற்றான் சோசலிச யாதார்த்தவாதத்தை முதன்மைப்படுத்தினர். சமூகக் கருத்தியலை வெளிப்படுத்தும் இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

ஏ.ஜே. கனகரத்தினா மார்க்சியமும் இலக்கியமும் (ஏ.ஜே.கனகரத்தினா, 1992. ப,92) என்ற கட்டுரையில் கையாண்ட இரு உதாரணங்களை இவ்விடத்தில் எடுத்தாள விரும்புகின்றேன்.

1. லெனின் ஓர் இளைஞர் குழுவைச் சந்தித்த பொழுது "நீங்கள் என்ன வாசிக்கிறீர்கள் புஸ்கினைப் படிக்கிறீர்களா?" என்று அவர்களைக் கேட்டாராம். அதற்கு "இல்லை புஸ்கின் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர், மாயா வோவ்ஸ்கிதான் எமக்குப் பிடித்தவர்" என ஒரு வாலிபன் பதிலுரைத்தானாம். லெனின் சிரித்துக் கொண்டு "மாயா வொஸ்கியிலும் பார்க்க புஷ்கின் சிறந்த எழுத்தாளர்" என்று சொன்னார்.

2. ஒரு நூலினை "இலக்கியம் என்று ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்று தீர்மானிப்பதற்கு, முதலில் அந்நூல் இலக்கியமா இல்லையா என்பதனை நிர்ணயித்த பின்பு தான் மார்க்கிய கோட்பாட்டினைக் கொண்டு அதனை மதிப்பிடுதல் வேண்டுமென" ரொட்ஸ்கி "இலக்கியமும் புரட்சியும்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு எடுத்துக்காட்டுக்களும் இவ்விரு மார்க்சிய விமர்சகர்கள் பற்றிய எமது கருத்துக்கு சூசிகையாக அமைகிறது. இவ்விமர்சகர்கள் எவ்வளவு தூரம் சர்வதேசத்திற்கு தமிழை - தமிழ் இலக்கியத்தை அடையாளப்படுத்தினார்களோ அதேயளவு கலாரசனை - ஈழத்துப் படைப்பாளிடமும் வாசகரிடத்தும் விருத்தியுறாது போவதற்கும் முக்கிய காரணமாயினர். இதனைப் பின்வரும் குறிப்புக்களால் உணர்த்தலாம்.

**24. சோசலிச யதார்த்தவாதத்தின் வழி, "வரையறுக்கப்பட்ட பாங்கு, மிக வாய்பாடான கதைப்பின்னல், குறித்தபடைப்புக்கு ஒவ்வாத கருப்பொருள், ஒவ்வாத கதை நகர்த்தல், அரசியற் பிரசங்கங்கள், சுபமுடிவு" என அமைதல் (ஏ.ஜே.க.,1992. ப,64) இது பொதுவழிப்பிரிப்பே அன்றி முழுமையானதல்ல. எல்லா சோசலிச யதார்த்த வாதப் படைப்புக்களுக்கும் பொருந்தாது.**

**25. சமூக அக்கறை அல்லது சமூகப்பிரச்சினையைக் கையாளுதல் என்ற**

**தோரணையில் படைப்புக்களை விவரணங்களாக, கோஷங்களாக, பிரசார நெடி மிகுந்ததாக்குதல்.**

26. **தரமற்ற வரட்டு மார்க்சிய இலக்கியங்கள் உருவாதல், தன்னுணர்வுப்படைப்புக்களை நிராகரித்தல்.**

27. **கலை இலக்கியத்திற்கே உரிய கலாரசனையும் விமர்சனவியல்பும் மிகுந்த படைப்புக்கள் காணாது போதலும் சிறு குழுக்களுக்குள் முடங்கிப் போதலும்.**

28. **மார்க்சியவாதிகள் அல்லாதாரின் படைப்புக்களின் உன்னதங்களில் கவனம் செலுத்தாதுவிடுதல் அவற்றைக் கீழ் மதிப்பீடு செய்தல்.**

இவ்வாறாக, இவர்களின் விமர்சனத்தால் எழுந்த தாக்கங்களைப் பட்டியற்படுத்தலாம். பாரதியை முதன்மைப்படுத்திய கைலாசபதி, ஈழத்து மஹாகவி பாரதியின் தடத்தில் பயணித்ததோடு செய்த புதுக்கலையாக்க முயற்சிகளையும் கண்டு கொள்ளவில்லை. மெய்யுள்வாதியான மு.த.வின் படைப்புகள் பற்றி அவர் இருக்கும்போது வாய் திறக்காத கைலாசபதி அவர் இறந்ததன் பின் அவரது இரண்டகம் பற்றி ஒரு கட்டுரை எழுதினார். எழுபதுகளில்; எழுதிய சட்டநாதன், அ.யோகராசா, தா.இராமலிங்கம், மு.பொ., சு.வி.குப்பிளான் சண்முகன், ஏன் மார்க்சியத் தளத்தில் கலாரசனை மிகுந்த எழுத்துக்களை எழுதிய சண்முகம் சிவலிங்கம், மருதூர்க்கொத்தன் போன்றோரையும் கண்டுகொள்ளவில்லை. அவர்களது எழுத்துக்கள் இவ்விரு ஜம்பவான்களைப் பொறுத்தவரை பேசாப்பொருட்களாயின.

சமூக அக்கறையுடைய படைப்புக்கள், மறுமலர்ச்சி காலத்தில் - அதற்கு முற்பட்ட காலத்தில் தோன்றிவிட்டது. அ.செ.முருகானந்தானின் **'மனிதமாடு'** சிறுகதைத்தொகுதியை அதற்குச் சிறந்த உதாரணமாகக் கூறலாம். ஆக, கலாரசனையற்ற நவீன இலக்கிய உருவாக்கத்திற்கு - அழகியலற்ற கலையாக்கச் செயற்பாட்டிற்கு - உயிர்ப்பற்ற சடஉருவாக்கத்திற்கு இவர்களின் விமர்சனங்களும் முக்கிய காரணங்களாயின. இவர்கள் கொள்கைச் சார்பு அந்த தளத்தில் எழுதிக்குவிக்கும் எழுத்தாளர்களை வெறும் விவரணங்களாலான படைப்புகளுக்கு ஊக்குவிக்கும் ஊக்கியாயிற்று. அவை யதார்த்தப் படைப்பாகி விடா. குறைபாடுடைய மொழி நடையை தம் கொள்கைக்காக ஏற்றுக் கொண்ட இவர்கள் தமிழின் நவீன இலக்கியத்தின் சிறந்த புலமைத்துவம் உடைய மொழிநடையைத் தந்த எஸ்.பொ. போன்றவர்களைப் புறமொதுக்கியதும் சுட்டத்தக்கது.

எழுபதுகளின் பிற்பகுதியில் முதன்மை பெறத்தொடங்கிய மார்க்சியவழி விமர்சகர்களான ஏ.ஜே, எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், மு.நித்தியானந்தம், சித்திரலேகா போன்றோர் ரசனை மிகுந்த கலையாக்க முயற்சிகளுக்கு முதன்மை கொடுத்தனர். நவீன (உதாரணம் - புதுக்கவிதை) வடிவங்களுக்கும் ஆதரவளித்தனர். அழகியலுடன் இணைந்த மார்க்சிய படைப்புக்களே காலத்தை வெல்லத்தக்கவை என்பதை உணர்ந்திருந்தனர்

என்பது அவர்களின் எழுத்தினூடு புலப்படுகிறது. இவர்களுக்கு முற்படவும் சமாந்தரமாகவும் மு.த.,மு.பொ., எஸ் பொ.,அ.யேசுராசா போன்ற

இன்னும் சிலரும் தன்னுணர்வுப் படைப்புக்களுக்கும் அழகியல் சார்ந்த மொழி நடைக்கும் முதன்மை கொடுத்தனர். இதன் வழி கைலாசபதி போன்றோரால் பேசப்படாது போன படைப்பாளிகளான மஹாகவி, நீலவாணன், மு.த. உள்ளிட்ட பலர் முதன்மைப்படுத்தப்படுகின்றனர்.

இந்நிலைமாற்றமும் தமிழ்த்தேசியம் அளித்த சிந்தனைச் செயலூக்கமும், தாய்மொழிவழிகற்ற சமூக உருவாக்க புதிய சிந்தனைத்தளத்தில் கலைப்படைப்புகள் உருவாயின. எண்பதுகளின் ஆரம்பம் தொட்டு தொண்ணூறுகளின் ஆரம்பம் வரையானகாலப்பகுதி அனுபவ வெண்கூட்டில் பிறந்த நல்படைப்புக்கள், இவை ஈழத்து இலக்கியச் செல்நெறிக்கு வலுவூட்டின. சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், பெண்களில் அ.சங்கரி, மைத்திரேயி, ஊர்வசி, செல்வி, சிவரமணி மற்றும்; உமாவரதராஜன், ரஞ்சகுமார், அஸ்வகோஷ், பா.அகிலன், நிலாந்தன், கருணாகரன் போன்றோரின் எழுத்துக்கள் விமர்சனவியல்பும் கலாரசனையும் மிகுந்தவையாக அமைந்தன.

இதன் பின் ஏற்பட்ட மிக இறுக்கமான போர்ச்சூழல் தமிழ் இலக்கியத்தை அகவயப்பட்ட உணர்ச்சிமயமான சூழலுக்கு உந்தித்தள்ளுகிறது. இதன் வழி, தன்னுணர்ச்சி மிக்க - தமிழுணர்ச்சி, வீரம், யுத்த வெற்றி, தேசியம், முன்னைப் பெருமைகள், அலங்கார வார்த்தைகள் முன் நிறுத்தப்படுகின்றன. இதுவும் முற்போக்கு இலக்கிய விமர்சனச் சூழலை ஒத்த தளத்திலும் அதற்கு அப்பாலும் இயங்கத் தொடங்கியது. யதார்த்தம் - கனவுலகு, தமிழுணர்ச்சி - பகையுணர்வு என முரண் தளங்களிலும் பயணித்தது. இதன்வழி போரின் நெடி, பிரசார நெடியாக எழுகிறது. சமநிலையற்ற படைப்புக்களும் முதன்மைப்படுத்தப்பட்டன. தமிழின விடுதலைக்கவிஞரான புதுவை இரத்தினதுரை "சிங்களவன் வெட்டிவிட்டான், சோனகன் குத்திவிட்டான்" எனத் தனிமனிதச் செயல்களை அவ்வவ்வினத்தின் செயல்களாகச் சித்தரிப்பதும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்திலும் பிரசார, அரசியற் பிரசங்க எழுத்துக்களே முதன்மைப்படுத்தப்பட்டன. யுத்தம்சாரா ஏனைய இலக்கியங்கள் இலக்கியங்களா என இலக்கிய அதிகார மையங்களால் கேள்வியும் எழுப்பப்பட்டன. அக்கேள்விகள் எதிர்பார்க்கும் விடைகளுக்கு மாறாகப் பதில் கூறிவிடமுடியாத நிலையும் இருந்தது. அதேவேளை இக்கால கட்டத்திலும் கருணைரவி, யோ.கர்ணன், விஷ்ணு, சித்தாந்தன், இராஜேஸ்கண்ணன்,தாட்சாயினி, மலைமகள் போன்ற நல்ல சில படைப்பாளிகளும் உருவாகினர் என்பதை மறுக்க இயலாது.

இன்றைய சூழல் உலகமயமாதற் சூழல்; பல்வேறு இசங்களையும் தாண்டிப் பின்னவீனத்துவ சிந்தனை கோலோச்சுங்காலமிது. அதன்

பெயரால் வினாப்பத்திரங்கள், விண்ணப்பங்கள், துண்டுப்பிரசுரங்கள் யாவும் சிறந்த படைப்புக்கள் எனப் புழுகப்படுங்காலம்; வடிவமற்ற வடிவம் என மூத்த படைப்பாளிகள் சிலர் தம்மைத் தக்கவைப்பதற்காக ஏதேதோ உரைக்குங்காலம். யுக சந்திகளில் யுக புராணங்களும் தீட்டுத் துணிகளும் வீடுகளும் கடவுளின் மரணமும் "ம்" எனும் ஒலியும் சந்திக்கும் வாழ்வியலின் பல்கோலங்களைச் சடுதியாக ஸ்பரிசிக்கும் காலம் எனப் பலவாறு எடுத்துரைக்கலாம். இக்காலத்தை இருப்புக்காகக் கொள்கை மாறலும் 'ரெண்ட்டுக்காக' (*trend*) எழுதுபவர்களுமாகக் கொள்கை மாறுதல் மலிந்த ஒன்றாகவே அடையாளப்படுத்த இயலும். பின்னவீனத்துவத்தைக் கொள்கையாக எடுத்துரைப்பவர்களை ஏற்பதில் பிரச்சினையில்லை. வடிவமற்றதை வடிவம் என உரைக்கும் பிதற்றல்களை ஏற்பதும் அது தொடர்பாக உரையாடுவதுமே சலிப்பைத் தருகிறது. கொள்கைகள், கோட்பாடுகள், முறையியல்கள் எதுவுமற்ற தனிமனித - சமூக அக்கறையற்ற, மொழி பற்றிய பிரக்ஞையற்ற, (ஒருமை, பன்மை, எழுவாய், பயனிலை என எதுவுமே முக்கியமில்லை எனல்) தான்தோன்றித்தனமான எழுத்துக்கள்-மையமற்ற புலம்பல்கள் உள்ள படைப்புக்கள் யாவும் மிகச் சிறந்த படைப்புக்களாகச் சிலாகிக்கப்படுவதுவே இன்று விமர்சனமாயிற்று. அபிப்பிராயங் கூறுதலும், பட்டியற்படுத்தலும், தொகுத்து எழுதுதலுமே விமர்சனமாயிற்று. கலா இரசனை இருண்மைச் சொற்களுள் சிக்குண்டு காணாமல் போயிற்று. விவரணக் கட்டுரைகள் பெரு விமர்சனங்களாகத் தாண்டவமாடுகின்றன.

ஆயினும் இதற்குமப்பால் சிறந்தவிமர்சனமும் கலாரனையுமுள்ள நஞ்சுண்டகாடு (நாவல்), மயான காண்டம் (கவிதை), கடவுளின் மரணம் (சிறுகதை) போன்ற இன்னும் சில நல்ல படைப்புக்களும் வெளிவராமல் இல்லை.

படைப்பைப் பற்றிப் பேசாது, அதன் பகைப்புலத்தை சொல் மாயைகளால் கட்டி அவற்றை உருட்டி உருட்டி உரைப்பதும் சோதிடம் சொல்வதுமே விமர்சனமாயிற்று. அ.செ.முருகானந்தன் போன்ற ஆக்க இலக்கியகர்தாக்களின் வழி முன்வைக்கபட்ட நவீன விமர்சனநோக்கு கனக.செந்திநாதனூடு செழிப்புற்றது. பின் கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களால் மார்க்சிய விமர்சனக் கோட்பாட்டு முறையியலாக வளர்த்தெடுக்கப்பட்டது. சிவத்தம்பி பிற்காலத்தில் தன் பழைய கருத்து நிலைகள் சிலவற்றை மாற்றிக் கொண்டார் என்பதும் கலாரசனைக்கு அழுத்தம் கொடுத்தார் என்பதும் நல்ல செய்தியாக இருக்கின்ற அதேவேளை திருக்குமரன் போன்றோரின் மலின படைப்புக்களையும் புழுக முற்பட்டார் என்ற துக்க செய்தியையும் பதிவு செய்யவேண்டியதாகவே உள்ளது. மாக்ர்ஸிசத் தளத்தில் ஏற்பட்ட புதிய மடை மாற்றம், மற்றும் அலை, புதுசு போன்ற சஞ்சிகைளின் வருகை போன்றன. எழுபதுகளின் பிற்பகுதி தொட்டு நல்ல விமர்சன - கலா ரசனைமிகுந்த படைப்புக்கள் வெளிவர வழிகோலின. ஆயினும் போரியற் சூழல் - சுயதேவைக்காகத் தொண்ணூறுகளில் பிரசார

படைப்புக்களுக்கு முதன்மை அளித்தது. தற்கால உலகமயமாதற் சூழல் முறையற்றதே முறையென்றும் வடிவமற்றதே வடிவம் என்றுங் கூறும் கூறுகெட்ட செயலை நற்செயலெனப் பாராட்டுபவர்களை உற்பவித்துள்ளது. விமர்சனமென்று அபிப்பிராயம் கூறுதல், கட்சிகட்டுதல், தொகுத்துக் கூறல், தரவுகளைப் பட்டியற்படுத்தல் அல்லது முழுமையாக நிராகரித்தல் என்ற தளங்களிலேயே இயங்குகிறது.

ரசனைக் குறைபாடுடைய கலை இலக்கியத்தை - இருண்மையை நல்ல படைப்பென்றும் 'உனக்கு விளங்கவில்லையெனில் நீ வளரவில்லை' என்ற கருத்து மனோபாவப் படைப்பாளிகளையும் அதன்வழி புளகாங்கிதமுறும் வரட்டு மனோநிலைகளையும் உருவாக்கியுள்ளது. இதுவே பின்னவீனத்துவம் என அவர்களை உரைப்பதும் சுட்டத்தக்கது. இருண்மைவாதிகள் பாரதி முதலானோர் பதவுரை, பொழிப்புரையுடன் கூடிய மரபு வடிவங்களை உடைத்தது ஏன் என்ற கேள்வியைத் தமக்குத்தாமே கேட்டுப் பதில் சொல்லிக் கொள்ளட்டும்.

கொள்கைப் பிடிப்பற்ற "ரெண்ட்டுக்கு"(*trend*) எழுதும் மூளைசாலிகளே இன்றைய சிறந்த படைப்பாளி என இன்னொரு மூளைசாலியால் புகழப்பவதும் நிதர்சனமாகவுள்ளது. அகவுந்தலற்ற - வாய்ப்பாட்டுச் சொற்களால் மட்டும் புனையப்படுவனவாகப் படைப்புக்கள் உருமாறிவிட்டன. இவ்வாறான அவலச் சூழலில் புதியதலைமுறையைச் சேர்ந்த, குணா கவியழகன், பிரியாங்கி, கிருஷாந், சயந்தன் போன்ற இன்னும் சிலரே நவீன இலக்கிய விமர்சன கலாரசனையுடைய படைப்புக்களைத் தருகின்றனர்.

ஈழத்து நல்ல இலக்கிய விமர்சனத்தின் வரவு சடுதியாக வளர்ந்து சடுதியாகக் காணாமல் போய்விட்டது என்றே கூறவேண்டும். நுஃமான், யேசுராசா போன்றோர் விமர்சனத்துறையைவிட்டு ஒதுங்கிவிட்டனர். மு.பொ., போன்றவர்கள் விழுந்தபாட்டிற்கு குறிசுடும் வல்லுனர்களாகத்; தம்மை தகவமைத்துக் கொண்டார்கள். நம்பிக்கை தரும் விமர்சனங்கள் குறிஞ்சி மொட்டுக்களாகவே உள்ளன. இதனால் கலாரசனை உடைய படைப்புக்களும் அவ்வாறே ஆயின.

**உசாத்துணை நூல்கள்**


1. கனகரட்ண.ஏ,ஜே., 1981 மார்க்சியமும் இலக்கியமும் சில நோக்குகள் அலை வெளியீடு, யாழ்ப்பாணம்.
2. நடராசன்.தி,சு.,2003 திறனாய்வுக் கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்;, சென்னை.
3. கிருஷ்ணராஜா,சோ., 1992 விமர்சன முறையியல், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.
4. வானமாமலை,நா., 1999 மார்க்சீய அழகியல், மக்கள் அச்சகம், சென்னை.
5. முருகையன்,இ., 1970 கவிதைநயம், சென்னை புக்ஸ்.
6. கைலாசபதி,க.,2002 திறனாய்வுப் பிரச்சினைகள் குமரன் புத்தக இல்லம்,

| | | |
|---|---|---|
| | (க.நா.சு.குழு பற்றி ஓர் ஆய்வு) | சென்னை. |
| 7. சிவத்தம்பி கார்த்திகேசு. 2010 | நவீனத்துவம் – தமிழ் – பின் நவீனத்துவம் | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்;, சென்னை. |
| 8. கைலாசபதி,க.,1972 | இலக்கியமும் திறனாய்வும், | வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம். |
| 9. கைலாசபதி,க., 1980 | நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், | மக்கள் வெளியீடு, சென்னை. |
| 10. சுப்பிரமணியம்.க,நா., 1959 | விமர்சனக்கலை, | சென்னை. |
| 11. முருகையன்,இ., 1988 | கைலாசபதியின் விமரிசனம் – கோட்பாடும் நடைமுறையும் | தாயகம் (கலை இலக்கிய மாத இதழ் யூலை) இதழ் 18, தேசிய கலை இலக்கியப் பேரவை, யாழ்ப்பாணம். |